தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.

ந.க.எண். 97242 /சி1/இ1/2012 நாள் 19.12.2012.

.......

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி – வட்டார வள மைய மேற்பார்வையாளர் – காலிப்பணியிடம் – முதுகலையாசிரியர்கள் மாறுதல் மூலம் நிரப்பிடுதல் – விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பம் – பரிந்துரையுடன் அனுப்பிடக் கோருதல் – சார்ந்து. |
| பார்வை | அரசாணை (நிலை)எண்.180/பக (சி2) துறை, நாள் 19.09.05 |

.....

2013–2014–ஆம் ஆண்டில் காலியாகக்கூடிய வட்டார வள மைய மேற்பார்வையாளர் பணியிடங்களை முதுகலையாசிரியர்களைக் கொண்டு பார்வையில் காணும் அரசாணையின்படி மாறுதல் மூலம் நிரப்பிட முதுகலையாசிரியர் பதவியில் 31.12.2012 அன்று 10 ஆண்டு பணி அனுபவம் உள்ள, வட்டார வளமைய மேற்பார்வையாளராக மாறுதலில் பணிபுரிய விருப்பம் உள்ள முதுகலை ஆசிரியர்களின் விண்ணப்பங்களை முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் 22.01.2013–க்குள் இவ்வியக்ககம் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவிக்கலாகிறது. இவ்விண்ணப்பங்கள் மாறுதல் கோரும் விண்ணப்பப் படிவத்திலேயே அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர் பரிந்துரை இல்லாமல், காலம் கடந்து இவ்வியக்ககத்தில் பெறப்படும் விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலாது

முதுகலை ஆசிரியர்களில் வட்டார வள மைய மேற்பார்வையாளராகப் பணிபுரிய விருப்பம் உள்ளவர் சார்பான விண்ணப்பங்களை உரிய பரிந்துரையுடன் இவ்வியக்ககம் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கலாகிறது.

ஒம் /– கு. தேவராஜன்
பள்ளிக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்